
GODependence
True freedom is being dependent on God

# செய்தி மடல்

டிசம்பர் 2024



## வாசிப்போம் சிந்திப்போம் – 2




நீங்கள் வேதாகமத்தை வாசிக்கும்போது ஒரு வசனம் அல்லது வேதப்பகுதியை அல்லது அதன் இருப்பிடத்தை நினைவில் வைத்துக்கொள்ள விரும்பினாலோ அல்லது தேவையுள்ளவர்களுக்கு அதைச் சொல்ல விரும்புகிறீர்கள் என்று வைத்துக்கொள்வோம். நீங்கள் என்ன செய்வீர்கள்? நாம் வாசித்த வேதாகம புத்தகத்தின் பெயர், அதிகாரம் மற்றும் வசனத்தின் எண் என்ன என்பதை குறிப்பெடுத்துக்கொள்வோம். அப்படித்தானே!

பரிசுத்த வேதாகமத்தின் அதிகாரம் மற்றும் வசன பிரிவுகள் நாம் விரும்புகிற வேதப்பகுதியை துரிதமாக எடுத்து வாசிக்கவும் மற்றவர்கள் அதை வாசிக்கும்படி சொல்வதற்கும் உதவியாக இருக்கிறது. தேவனுடைய எல்லையில்லா அன்பைப் பற்றி மற்றவர்களுக்குச் சொல்ல நாம் யோவான் 3:16 ஐயும், நம் வாழ்வில் தேவனுடைய கிருபை செயல்படுவது பற்றிக் கூற புலம்பல் 3:22, 23 ஐயும், மற்றவர்களை உற்சாகப்படுத்த 1 தெசலோனிக்கேயர் 5:16-19; தேவ ஜனங்களுக்கு இருக்கிற பாதுகாப்பைப் பற்றிக் கூற எண்ணாகமம் 23:23 மற்றும் சங்கீதம் 121:7,8 ஐயும், குணமாகுதல் தேவைப்படுகிறவர்களுக்கு யாத்திராகமம் 15:26, சங்கீதம் 103:2-5; 147:3, 1 பேதுரு 2:24, மற்றும் மத்தேயு 10:8 ஐயும் நாம் நம்பிக்கை மற்றும் உற்சாகத்துடன் குறிப்பிடுவதுண்டு.

இது போல, நம் வாழ்க்கையில் எல்லா சமயங்களுக்குமேற்ற பல வேத வசனங்களை நாம் வரிசையாக சொல்லமுடியும். உண்மை என்னவெனில், தேவன் இன்றும் பரிசுத்த வேதாகமம் மூலமாக நம்முடன் பேசுகிறார். பரிசுத்த வேதாகமத்தில் உள்ள அதிகாரம் மற்றும் வசன எண்கள் நமக்குப் பலவிதங்களில் உதவுகின்றது. ஆனால், நமக்குக் கிடைத்திருக்கும் இந்த பாக்கியம் 10 நூற்றாண்டுகளுக்கும் மேலாக முன்பு வாழ்ந்த கிறிஸ்தவர்களுக்குக் கிடைக்கவில்லை. எபிரேய, அராமிக், மற்றும் கிரேக்க மொழியில் உள்ள மூல வேதாகமப் பிரதிகளில் அதிகார மற்றும் வசன பிரிவுகள் கிடையாது என்பது உங்களுக்கு ஆச்சரியமானதாக இருக்கலாம்.

யூத அறிஞர்கள் 9ஆம் நூற்றாண்டில் இருந்து பழைய ஏற்பாட்டில் வசனங்களுக்கு எண்களைக் குறிப்பிட ஆரம்பித்தனர். கி.பி 13ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில், கேன்டர்பரியின் பேராயர் ஸ்டீபன் லாங்டன் (Stephen Langton) என்பவர் பழைய மற்றும் புதிய ஏற்பாட்டுப் புத்தகங்களை அதிகாரங்கள் மற்றும் வசனங்களாகப் பிரித்து, வாசகர்கள் எளிதில் வாசிக்க வசதியான ஒரு கட்டமைப்பை உருவாக்கினார்.

ஆயினும், வசனம் மற்றும் அத்தியாயப் பிரிவுகளுடன் வெளிவந்த முதல் பைபிள் 1555 இல் ராபர்ட் எஸ்டியன் (Robert Estienne) என்பவர் வெளியிட்ட லத்தீன் வல்கேட் என்று சொல்லப்படுகிற இலத்தீன் மொழி வேதாகம மொழிபெயர்ப்பு ஆகும். இன்று நாம் பயன்படுத்துகிற வேதாகமங்களில் உள்ளபடியான அத்தியாயம் மற்றும் வசனப் பிரிவுகளை உள்ளடக்கிய முதல் வேதாகம பதிப்பு, 1560 இல் வெளியிடப்பட்ட ஜெனீவா பைபிள் என்கிற ஆங்கில மொழிபெயர்ப்பு ஆகும். இது வேதாகம வசனங்களை இன்னும் நெருக்கமாகவும் எளிதில் வாசிக்க, ஆராய்ந்து பார்க்கவும் உதவுகிறது.

அடுத்த முறை நீங்கள் உங்களுக்குப் பிடித்தமான வேதாகம வசனத்தை சொல்லும்போதோ அல்லது வாசிக்கும்போது, அந்த வேதப்பகுதியின் அர்த்தம் என்ன என்பதை புரிந்துகொள்ள அவ்வசனத்தின் முன்னும் பின்னும் இருக்கிற வசனங்களையும் சேர்த்து வாசியுங்கள். முறையான மற்றும் தினசரி வேதாகம வாசிப்பானது இன்று தேவன் நம்முடன் என்ன பேச விரும்புகிறார் என்பதைப் புரிந்துகொள்ள நமக்கு உதவுகிறது. எங்கள் GODependence வேதவாசிப்புச் சவால்கள் நீங்கள் விரும்புகிற கால அளவிற்குள் முழு வேதாகமத்தையும் வாசிப்பதற்கான ஒரு வாய்ப்பை உங்களுக்குத் தருகிறது.

தொடர்ந்து வாசிப்போம் சிந்திப்போம்...

**- சகோ. அற்புதராஜ் சாமுவேல்**

### எமது தரிசனம்

ஜனங்கள் தேவனை சார்ந்து இருக்கும் வாழ்க்கையை கட்டமைத்துக் கொள்ள அவர்களுக்குத் தேவையான ஞானம், ஆக்கவளம் மற்றும் வலிமை அளிப்பது.

### எமது பணித்திட்டம்

வேத வசனம் மற்றும் ஜெபத்தில் தங்களை அதிகமாக ஈடுபடுத்திக் கொள்வதன் மூலமாக ஜனங்கள் தேவனைச் சார்ந்து இருப்பதில் உதவ **GODependence** நாடுகிறது.

**உங்களை முழுவதுமாக வேத வசனங்களுக்குள் பொருத்திக் கொள்ளுங்கள். மேலும், வேதவசனங்களை உங்களுக்குள் முழுவதுமாக உட்செலுத்திக்கொள்ளுங்கள். - ஜோஹன் ஏ. பெங்கெல்**

# ஆசிரியரிடமிருந்து

**கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமான சகோதர சகோதரிகளே,**

உங்கள் அனைவருக்கும் நமது ஆண்டவரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் GODependence குழுவின் சார்பில் எனது அன்பின் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன். மீண்டும் இந்த செய்திமடல் மூலமாக உங்களை சந்திப்பதில் மகிழ்ச்சி. எமது முதலாவது செய்திமடலை வாசித்து கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டவர்களுக்காக தேவனுக்கு நன்றி செலுத்துகிறோம்.

கிறிஸ்தவ வாழ்க்கையில் ஜெபத்தின் முக்கியத்துவம் வலியுறுத்தப்படும் அளவிற்கு வேத வாசிப்பிற்கான முக்கியத்துவம் வலியுறுத்தப்படுவதே இல்லை. புதிய ஏற்பாட்டில் இயேசுகிறிஸ்து 7 குறிப்பிட்ட காரியங்களில் தனது உரையாடல்களின் போது 'நீங்கள் [வேதத்தில்] வாசிக்கவில்லையா' என வினவுவதை 10 இடங்களில் பார்க்கிறோம். அவற்றில் குறிப்பாக 3 இடங்களில் (மத். 21:16, மத். 21:42, மாற்கு 2:25) நீங்கள் வேதத்தில் 'ஒருக்காலும்' வாசிக்கவில்லையா என கேட்பதைப் பார்க்கிறோம். வாழ்நாளில் பரிசுத்த வேதாகமத்தை ஒருமுறைகூட முழுமையாக வாசிக்காத கிறிஸ்தவர்கள் எத்தனையோ பேர் நம்மிடையே உண்டு.

நமக்குத் தெரியாத ஒன்றை ஒருவர் நம்மிடம் வினவும் போது, அதுகுறித்து நமக்குத் தெரியவில்லை என்றால், 'சொன்னால் தானே தெரியும்' என சொல்லி சமாளித்துக் கொள்கிறோம். நமது வாழ்க்கைக்குத் தேவையான அனைத்தையும் உள்ளடக்கிய பரிசுத்த வேதாகமம் நம்மிடம் இருக்கும் போது எனக்குத் தெரியாது என நாம் ஒதுங்கிவிட முடியாது. அவற்றை வாசித்துத் தெரிந்து கொள்வது மிகவும் அவசியமான ஒன்றாகிறது.

கடந்த மாத செய்தி மடலில் இடம்பெற்ற 'வேதாகம குறுக்கெழுத்துப் புதிர்' மற்றும் 'விளையாடுவோம் வேதாகம விளையாட்டு' போன்றவைகளில் உற்சாகமாக கலந்து கொண்ட ஒவ்வொருவரையும் வாழ்த்துகிறோம். உங்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்ளுகிறோம். தொடர்ந்து ஒவ்வொரு செய்தி மடல்களிலும் இது போன்ற நிகழ்வுகளில் பங்கெடுத்து உங்கள் வேத அறிவினை மேம்படுத்த உங்களை அன்புடன் அழைக்கிறோம்.

சர்வதேச வேதவாசிப்பு தினத்தை (16 டிசம்பர்) முன்னிட்டு அந்த நாளில் நீங்கள் தனிப்பட்ட முறையில், குடும்பமாக, குழுவாக அல்லது சபையாக செயல்படுத்த வாய்ப்புள்ள சிலவற்றை நாங்கள் பரிந்துரைத்துள்ளோம். ஏதாவது ஒருவிதத்தில் அவற்றை அனுசரித்து வேதவாசிப்பு தினம் குறித்தும் வேத வாசிப்பின் முக்கியத்துவம் குறித்து மற்றவர்களும் அறிந்திடச் செய்ய வேண்டுகிறோம். அவற்றை எங்களுக்கும் தெரியப்படுத்துங்கள்.

நமது GODependence செய்தி மடல் தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் மாதந்தோறும் வெளிவருகிறது. இதனை வாசிக்கும் உங்களில் வேத வசனத்தைக் குறித்த வாஞ்சையும் தாகமும் உங்களுக்குள் பெருகட்டும் என ஜெபிக்கிறோம். GODependence ஊழியங்களுக்காக தொடர்ந்து ஜெபியுங்கள். இதன் சேவைகளை மற்றவர்களுக்கு அறிமுகப்படுத்துங்கள். கர்த்தருடைய நாமம் மகிமைப்படுவதாக.



**கிறிஸ்துவின் பணியில்,**
**Dr. பேதுரு தேவதாசன்.**

## துதி மற்றும் ஜெபக் குறிப்புகள்

### துதிப்போம்:

1. GODependence ஊழியத்திலே ஈடுபட்டு வருகின்ற Admins and Volunteers team க்காக.
2. GODependence ன் முதல் செய்தி மடல் 2024 நவம்பர் மாதம் வெளியிட ஆண்டவர் கொடுத்த கிருபைகளுக்காக.
3. October 2024 மாதத்திலே வெற்றிகரமாக வேதவாசிப்பை நிறைவு செய்த ஒவ்வொருவருக்காகவும்.
4. நவம்பர் 2024 மாத வேதவாசிப்பு சவால் குழுக்களில் இணைந்திருக்கின்றவர்களுக்காக.
5. வேதவாசிப்பு சவால் குழுக்கள் (BRC), வேத தியான குழுக்கள் (BMG) மற்றும் சிறுவர் வேதவாசிப்பு (CBRC) குழுக்களுக்காக.

### ஜெபிப்போம்:

1. வேதவாசிப்பு சவால்களில் இணைந்திருக்கிற ஒவ்வொருவரின் குடும்பங்களுக்காக. பெலவீனங்களுடன் இருக்கிற ஒவ்வொருவருக்காகவும். மற்றும் அவர்கள் எல்லா சூழ்நிலைகளையும் கடந்து வேதவாசிப்பை நிறைவு செய்ய.
2. வேத தியான குழுக்கள் (BMG) January 2025 முதல் மீண்டும் ஆரம்பிக்கப்பட மற்றும் அதன் ஆயத்தப்பணிகளுக்காக.
3. Nepali மொழியில் புதிய வேதவாசிப்பு சவால் குழு ஆரம்பிக்க எடுக்கப்படுகின்ற முயற்சிகளுக்காக. ஆண்டவருக்கு சித்தமானால் புதிய வருடத்தில் தேவை உள்ள மொழியில் வேதவாசிப்புச் சவால் குழுக்கள் ஆரம்பிக்கப்பட.
4. சிறுவர் வேதவாசிப்பு குழுவில் (Children's Bible Reading) இணைந்து வேதாகமத்தை வாசித்து வருகின்ற பிள்ளைகளுக்காக. அவர்கள் தொடர்ந்து ஆண்டவருக்குள் வளர.
5. டிசம்பர் 16 - சர்வதேச வேதவாசிப்பு தினத்தை (International Day of Bible Reading) முன்னிட்டு திட்டமிடப்படும் நிகழ்வுகளுக்காக மற்றும் அதற்கான ஆயத்தங்களுக்காக.

**நீங்கள் தேவனுடைய வார்த்தையின்படி வாழ விரும்பவில்லை என்றால், அவருடைய வார்த்தையைப் படிப்பதையும் கேட்பதையும் விட்டுவிட்டு, அதைப் பிசாசுக்குக் கொடுத்து விடலாம். - மார்ட்டின் லூத்தர்**



# தேவனுடைய உண்மையை நினைவுகூர ஒரு அழைப்பு

சகோ. அற்புதராஜ் சாமுவேல்

**நாம் நிர்மூலமாகாதிருக்கிறது கர்த்தருடைய கிருபையே, அவருடைய இரக்கங்களுக்கு முடிவில்லை. அவைகள் காலைதோறும் புதியவைகள்; உமது உண்மை பெரிதாயிருக்கிறது. (புலம்பல் 3:22-23)**

ஒரு புதிய ஆண்டு அல்லது மாதம் துவங்கும்போது, பலரும் மிகவும் உற்சாகமாகவும், எதிர்பார்ப்புடனும், அந்த புதிய துவக்கத்தைக்குறித்த மகிழ்ச்சியுடனும் இருப்பார்கள். அநேக கிறிஸ்தவர்கள் தங்களை உற்சாகப்படுத்துகிற, ஆறுதல்படுத்துகிற, மற்றும் நம்பிக்கையைத் தருகிற வாக்குத்தத்த வசனங்களுடன் ஒரு புதிய ஆசீர்வாதமான ஆரம்பத்தை உடையவர்களாக இருக்க விரும்புகின்றனர். எனினும், நம் கடந்தகாலத்தைக் குறித்து நம்மிடம் கேட்கப்படும்போது, நாம் பொதுவாக அப்படி ஒரு நேர்மறை மனப்பான்மையை உடையவர்களாக இருப்பதில்லை. நம் கடந்தகால தோல்விகள், இழப்புகள், அவமானங்கள், பலவீனங்கள், கஷ்டங்கள், மற்றும் உபத்திரவங்கள் ஆகிய அனைத்தும் நம் கண்முன் வந்து, கடந்த காலத்தைக் குறித்து நினைப்பதைக் கூட கடினமானதாக மாற்றிவிடுகிறது. "கடந்த காலம் காரிருளாகவும் எதிர்காலம் மிகவும் மங்கலாகவும் இருக்கிறது" என தங்களுடைய கசப்பான அனுபவங்களின் அடிப்படையில் சிலர் கூறுகின்றனர். அவர்கள் தங்கள் எதிர்காலமானது நம்பிக்கையற்றதாகவும் நிச்சயத்தன்மை இல்லாததாகவும் இருக்கும் என நினைக்கின்றனர். இந்த 2024ஆம் ஆண்டில் 11 மாதங்களை நாம் நிறைவு செய்திருக்கிறோம். இதைக் குறித்து நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்? சமீப காலத்தில் நிகழ்ந்த பல்வேறு சம்பவங்கள் அனைத்தும் உங்கள் மனதில் மின்னலெனத் தோன்றி மறையக்கூடும்.

புலம்பல் புத்தகத்தில், தேவனுடைய ஜனங்கள் சிறைபிடிக்கப்பட்டவர்களாக அந்நிய மண்ணில் பட்ட பாடுகள், கஷ்டங்கள் மற்றும் எதிரிகளால் அவர்கள் மீது கட்டவிழ்க்கப்பட்ட எல்லா உபத்திரவங்களையும் நினைத்து புலம்பிக்கொண்டிருந்தனர். மக்கள் அனுபவித்த வேதனையான நினைவுகளைப் பற்றிய ஒரு பிம்பத்தை நமக்குக் காட்டுகிறது. அது எதிரிகளால் கொல்லப்பட்ட தேவஜனங்களின் அரசர்கள், ஆசாரியர்கள், அரச குமாரர்கள், மூப்பர்கள், மற்றும் அப்பாவி மக்களைப் பற்றி நமக்குக் கூறுகிறது. மேலும், ஜனங்களில் வாழ்வாதாரம் மிகவும் மோசமான நிலையில் இருந்தது (புலம்பல்: 2:20; 4:10). அவர்கள் தங்கள் மகிமை அனைத்தையும் இழந்தவர்களாக காணப்பட்டனர். அவர்கள் நம்பிக்கையின்றி தங்கள் கவலைகள் மற்றும் பாடுகளைக் குறித்து புலம்பிக்கொண்டிருந்தபோது, அவர்களுக்கு நம்பிக்கை ஒளியைக் கொடுத்த ஒன்றை திடீரென நினைவுகூர்ந்தனர் (புலம்பல் 3:21).

அவர்கள் வேதனையான அனுபவங்களின் மத்தியில் இருந்தது உண்மைதான் என்றாலும், தேவனுடைய மாபெரும் அன்பு அல்லது கிருபையினால் மட்டுமே தாங்கள் உயிரோடிருக்கிறோம் என்பதை உணர்ந்தனர்.



> **" தேவனுடைய அன்பும் இரக்கமும் ஒன்றையொன்று விட்டு பிரிக்கமுடியாதவை ஆகும். காலையில் சூரியன் உதிக்கிறதோ இல்லையோ, தேவனுடைய மாபெரும் அன்பு அல்லது கிருபை மற்றும் அவருடைய இரக்கங்கள் ஒவ்வொருநாளும் புதிதானவையாக இருக்கின்றன. "**

தேவ ஜனங்களாகிய "நாம் நிர்மூலமாகாதிருக்கிறது கர்த்தருடைய கிருபையே" என்று பாடலாகப் பாடினர். தேவனுடைய கிருபையைப் பெற அவர்கள் தகுதியானவர்கள் அல்ல என்பதை அறிந்திருந்தனர். ஆனால், தேவனுடைய அன்பு ஒருபோதும் தவறாதது மற்றும் முடிவில்லாதது என்பதை அவர்கள் புரிந்துகொண்டனர். "நாம் நிர்மூலமாகாதிருக்கிறது கர்த்தருடைய கிருபையே, அவருடைய இரக்கங்களுக்கு முடிவில்லை" என்று அவர்களைச் சொல்ல வைத்தது. தேவனுடைய அன்பும் இரக்கமும் ஒன்றையொன்று விட்டு பிரிக்கமுடியாதவை ஆகும். காலையில் சூரியன் உதிக்கிறதோ இல்லையோ, தேவனுடைய மாபெரும் அன்பு அல்லது கிருபை மற்றும் அவருடைய இரக்கங்கள் ஒவ்வொருநாளும் புதிதானவையாக இருக்கின்றன.

தேவன் நம்முடன் இருந்து நாம் அவரது பிரசன்னத்தை உணராத நேரங்களிலும் கூட அவர் நம்மோடு எவ்விதம் இருந்தார் என்பதைச் சிந்தித்துப் பார்க்க சற்று நேரம் ஒதுக்குவோம். எவ்வித உதவியுமின்றி நாம் தனியே கஷ்டப்பட்டதாக நாம் நினைத்திருக்கலாம். ஆனால், தேவன் தம் மாபெரும் அன்பினால் நாம் ஆறுகளைக் கடக்கும்போதும் அக்கினியினூடாக நடக்கும்போதும் நம்முடனே கூட இருந்தார்/இருக்கிறார் (ஏசாயா 43:1-5). தமது கண்களின் இமைபோல தேவன் நம்மைப் பாதுகாக்கிறார். அநேகநேரங்களில், தேவன் நம்முடனே இருந்திருக்காவிடில், நமக்கு என்ன நடந்திருக்கும் என்பதை நாம் உணராமல் போய்விடுகிறோம் (சங்கீதம் 124). தேவனுடைய உண்மையை நாம் தியானிக்கும்போது, நாம் அவருக்கு உண்மையில்லாதவர்களாக இருக்கும்போதும் கூட அவர் தாம் செய்த வாக்குத்தத்தங்களுக்கு எவ்வளவு உண்மையாக இருக்கிறார் என்பதை நாம் புரிந்துகொள்வோம்
(2 தீமோத்தேயு 2:1-3).

கிறிஸ்துவுக்குள் பிரியமான நண்பர்களே, தேவன் உங்களுக்குச் செய்த நன்மைகளை எண்ணிப் பார்த்து, தேவன் செய்தருளின வாக்குத்தத்தங்களை நிறைவேற்றுவதில் உண்மையுள்ளவராக இருப்பதை நினைத்து அவரைத் துதியுங்கள். தேவன் சகலத்தையும் அவருடைய பரிபூரணமான/ஏற்ற காலத்தில் செய்கிறார். நாம் அவரை எக்காலத்திலும் நம்பமுடியும். நாம் தேவனையும் அவருடைய வாக்குத்தத்தங்களையும் நம்பும்போது, "உம்மைத் துதிக்கும் நேரத்தில் நான் எப்படி மவுனமாக இருக்க முடியும்? இப்போது என் இருதயம் ஆனந்தக் களிப்பினால் நிறைந்து உம்மைப் பாடுகிறது. நான் நன்றி சொல்லாமல் இருக்கவே முடியாது, என்ன சொன்னாலும் அது போதாது." என்று சொல்லி நாம் சங்கீதக்காரனைப் போல பாடுவோம் (சங்கீதம் 30:12). சிறைபிடிக்கப்பட்டு அந்நியநாட்டில் இருக்கும்போது, பயங்கரமான அனுபவங்களை உடையவர்களாக இருந்த நேரத்தில் தேவனுடைய உண்மையைப் பற்றி இஸ்ரவேலர்களால் பாட முடியும் எனில், நம் சூழ்நிலை என்னவாக இருந்தாலும் நாமும் தேவனை நினைத்துப் பாட முடியும். கிறிஸ்து இயேசுவில் நாம் மேலான சிறந்த வாக்குத்தத்தங்களை உடையவர்களாக இருக்கிறோம்!

**பரிசுத்த வேதாகமமானது சிறைச்சாலையான இவ்வுலகில் உள்ள ஒரு ஜன்னல் ஆகும். அதின் வழியாக நாம் நித்தியத்தைக் காண முடியும். - தீமோத்தேயு**

GODependence ஊழியம் ஆரம்பித்து இதுவரையும் கடந்து வந்த பாதைகளை ’5 வருடங்களாக GODependence’ என்ற தலைப்பில் ஒரு கேள்வி-பதில் தொடராக நாம் அறிந்து வருகிறோம். இதனை ஆரம்பித்த டாக்டர். பேதுரு தேவதாசன் அவர்கள் கடந்த செய்தி மடலில் இது கோவிட்-19 ஊரடங்கு காலகட்டத்தில் ஆரம்பிக்கப்பட்ட ஆன்லைன் ஊழியமா?, இது எப்படி ஒரு ஊழியமாக முன்னெடுக்கப்பட்டது? ஆரம்பத்தில் ஒரே மாதத்தில் முழுவேதாகமத்தையும் வாசிக்கும் சவாலை எப்படி ஆரம்பித்து நடத்தினார்கள்? இந்த வேத வாசிப்பு சவால்களில் தற்போது இருக்கும் 6 வகையாக கால அளவுகளில் முழுவேதாகமத்தையும் வாசிக்கும் திட்டங்கள் எப்படி ஆரம்பிக்கப்பட்டன? போன்ற கேள்விகளுக்கு பதிலளித்திருந்தார்கள். இந்த மாதமும் அவர்களிடம் இன்னும் சில கேள்விகளை கேட்டுத் தெரிந்து கொள்வோம்... வாருங்கள்.

**- சகோ. டென்சிங் டென்னிஸ், குவைத்.**

**கேள்வி: அண்ணே, கடந்த மாத செய்தி மடலில் GODependence ஊழியம் ஆரம்பத்தைக் குறித்து அருமையாக கூறினீர்கள். GODependence என்ற பெயரை எப்படி தெரிவு செய்தீர்கள்?**

**பதில்:** GODependence என்பது ஆங்கில அகராதியில் இல்லாத ஒரு வார்த்தை; அது நாமாக உருவாக்கிக் கொண்டது. நான் கல்லூரி நாட்களில் எனது எழுத்துக்கலைக்கு உரமிட்டதும் ஆதாரமாகவும் விளங்கியது நற்செய்தி மாணவர் மன்றம் நடத்தும் தரிசனச்சுடர் பத்திரிக்கை. அவ்வப்போது அதன் தேவைகளுக்கு ஏற்ற கட்டுரைகளை எழுதுவது மட்டுமே எனது வழக்கமாக இருந்தது. பட்ட மேற்படிப்புகளுக்கு பின்னர் 2007 இல் கிறிஸ்தவ வட்டாரத்தின் தேவைகளுக்கு ஏற்ப நானாக கட்டுரைகளை எழுத ஆரம்பித்தபோது அவைகளை ஒரு பிளாக்(Blog) வடிவில் எழுத ஆரம்பித்தேன். அப்போது அதற்கு நான் வைத்திருந்த பெயர் GODependence. GOD மற்றும் Dependence என்ற இரு வாரத்தைகளின் இணைப்புதான் GODependence.

கல்லூரி நாட்களின்போது நான் பயன்படுத்திய அனுதின மன்னா தியான புத்தகத்தில், “உண்மையான விடுதலை தேவனைச் சார்ந்து இருப்பதிலேயே இருக்கிறது” என்ற ஒரு மேற்கோளை நான் வாசித்த ஞாபகம். எனது எழுத்துக்கள் மூலம் எப்படியாவது தேவனை சார்ந்து இருக்கும் வாழ்க்கைக்கு நேராக மக்களை வழிநடத்த வேண்டும் என்பதுதான் என்னுடைய நோக்கமாக இருந்தது. எனவே ’This is the place where people who want to go dependent on God (GODependence) can find resources to do so.’ என அந்த பிளாக்குக்கு விளக்கம் கொடுத்திருந்தேன். மாறிவரும் காலச் சூழ்நிலைகளுக்கு ஏற்ப 2019-முதல் வேதவாசிப்புச் சவால்களை முன்னெடுத்தபோது, அதற்கும் நான் GODependence என்ற பெயரையே பயன்படுத்தினேன். என்னுடன் தன்னார்வமாக நண்பர்கள் சிலர் இணைந்து செயல்படும்போதும் பெயர் குறித்த விவாதம் எழவில்லை. 2022ம் வருடம் ஜூலை மாதத்தில் நாங்கள் அரசாங்கத்தில் பதிவு செய்தபோதும் இதனை GODependence ட்ரஸ்ட் என்ற பெயரில் பதிவு செய்து கொண்டோம்.

**கேள்வி: GODependence ஊழியத்தின் தரிசனம் மற்றும் பணித்திட்டம் என்னென்ன?**

**பதில்:** ‘உண்மையான விடுதலை தேவனை சார்ந்திருப்பதிலேயே உள்ளது’ என்பதை நாங்கள் உறுதியாக நம்புகிறோம். எனவே இந்த உண்மையை மனதிற்கொண்டு ’ஜனங்கள் தேவனைச் சார்ந்து இருக்கும் வாழ்க்கையைக் கட்டமைத்துக் கொள்ள அவர்களுக்குத் தேவையான தரிசனம், ஆக்கவளம் மற்றும் வலிமை அளிப்பது’ தான் எமது தரிசனமாக இருக்கிறது. வேதவாசிப்பும் ஜெபமும் ஒரு விசுவாசியின் இரு கண்கள் போன்றவை. எனவே வேதவசனம் மற்றும் ஜெபத்தில் தங்களை அதிகமாக ஈடுபடுத்திக் கொள்வதன் மூலமாக ஜனங்கள் தேவனைச் சார்ந்து இருப்பதில் அவர்களுக்கு உதவும் முயற்சிகளில் நாங்கள் ஈடுபடுகிறோம். இது தான் எமது பணித்திட்டமாக இருக்கிறது.

**கேள்வி: GODependence நடத்தும் வேதவாசிப்புச் சவால்கள் மட்டுமே இந்த ஊழியத்தின் செயல்பாடுகளா? வேறு ஏதும் உண்டா?**

**பதில்:** ஆரம்பத்தில் இருந்த வேதவாசிப்புச் சவால் செயல்பாடுகள்தான் பின்னர் GODependence என ஒரு ஊழியமாக உருவெடுத்ததைக் குறித்து கடந்த இதழில் நாம் கண்டோம். குறிப்பிட்ட காலகட்டத்திற்குள் ஒருமுறை அல்லது முதல்முறை பரிசுத்த வேதாகமத்தை வெற்றிகரமாக வாசித்தவர்கள் மிகுந்த உற்சாகத்துடன் மீண்டும் மீண்டும் வாசிக்க ஆரம்பித்தனர். எனவே தான் இந்த வேதவாசிப்புச் சவால்கள் இன்றும் வெற்றிகரமாக தொடர்கின்றன. பரிசுத்த வேதாகமத்துடனான நமது உறவு அதனை வாசிப்பதுடன் முடிந்து விடுவதில்லை மாறாக அதனை தொடர்ந்து வாசிப்பதில் தான் ஆரம்பிக்கிறது என்கிறார் Michael S. Heiser என்ற வேத அறிஞர். எனவே பரிசுத்த வேதாகமத்தை முறையாக தொடர்ச்சியாக வாசித்து வருபவர்கள் அதன் அடுத்தடுத்த படிநிலைகளான வேத தியானம் (Bible Meditation) வேத வசனத்தை மனப்பாடம் செய்தல் (Bible Memorisation) வேதத்தை ஆராய்ந்து படித்தல் (Bible Study) போன்ற நிலைகளுக்கு செல்ல வேண்டும் என்பது எமது எதிர்நோக்காக இருக்கிறது.

அதன்படியாக நடைபெறும் வழக்கமான வேதவாசிப்புச் சவால்களுடன் (BRC) முறையாக பரிசுத்த வேதத்தை தியானிப்பதற்கான வேத தியான குழுக்களும் (BMG) ஆகஸ்ட் 2020-ல் ஆரம்பித்து ஒரு வருடத்திற்கு நடைபெற்றன. பின்னர் அவை சிலகாலம் தடைபட்டு மீண்டும் ஜூலை 2022-ல் மீண்டும் ஆரம்பித்து ஒரு வருடத்திற்கு நடைபெற்றன. பின்னர் மீண்டும் 2025 ஜனவரி முதல் அவை ஆரம்பித்து தொடர்ச்சியாக நடத்த திட்டமிட்டு செயல்பட்டு வருகிறோம்.

**எவ்வளவு அதிகமாக வார்த்தையை அறிகிறோமோ, அவ்வளவு அதிகமாக அது நம்முடைய நவீன மற்றும் தற்கால பிரச்சனைகளை கையாள்வதை கண்டுபிடிப்போம். - மார்ட்டின் லியாட் ஜோன்ஸ்**

வேத வசனங்களை மனனம் செய்யும் நடவடிக்கைகள் எங்கள் குழு அளவிலும் இன்னும் அது ஆயத்த நிலைமையிலே உள்ளன. நாங்கள் அவற்றை சிறுவர் வேதவாசிப்பு குழுக்களில் நடைமுறைப்படுத்த முயற்சிசெய்து வருகிறோம். அவை நடைமுறைக்கு வந்த பின்னர் அவற்றை பெரியவர்களுக்கான வேதவாசிப்புச் சவால்களிலும் அவற்றை நடைமுறைப்படுத்துவோம். வேத ஆராய்ச்சிக்கான ஏற்பாடுகளைப் பொறுத்தவரையில் அதற்கான திட்டம் மற்றும் செயல்பாடுகள் குறித்து நாங்கள் தெளிவுள்ளவர்களாக இருந்தாலும், மக்களை வேதவாசிப்பு, வேத தியானம், வேத மனனம் போன்ற நிலைகளுக்கு எடுத்துச் சென்று பின்னர் வேத ஆராய்ச்சி நடவடிக்கைகளுக்குள் செல்லலாம் என்ற திட்டத்தில் நாங்கள் இருக்கிறோம்.

தேவைகளுக்கு ஏற்ப தரமான ஆவிக்குரிய புத்தகங்களை வெளியிடுவதும் நம்முடைய நடவடிக்கைகளில் ஒன்றாக இருக்கிறது. அதன்படி இதுவரையும் 5 புத்தகங்களை நாங்கள் வெளியிட்டு இருக்கிறோம். இன்னமும் 6 புத்தகங்களை வெளியிடுவதற்கான ஆயத்தப்பணிகள் தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. மேலும் 2023 டிசம்பர் 16 அன்று முதல் சர்வதேச வேதவாசிப்பு தினத்தை அனுசரிக்கும்படியான ஒரு வாய்ப்பை தேவன் நமக்குக் கொடுத்திருக்கிறார். இதுபோன்று அவர் நடத்தும் விதமான செயல்பாடுகளுக்கு நாங்கள் ஆயத்தமாக இருக்கிறோம்.

**கேள்வி: GODependence வேதவாசிப்புச் சவால்களில் இணையும் ஒருவர் அதனை வெற்றிகரமாக வாசித்து முடிப்பதற்காக நீங்கள் என்னென்ன வழிமுறைகளை வைத்திருக்கிறீர்கள்?**

**பதில்:** வேதவாசிப்புச் சவால்களில் இணைந்து பரிசுத்த வேதாமத்தை வாசித்து முடிப்பது என்பது அவ்வளவு எளிதான காரியம் அல்ல. எனவேதான் அதனைச் சவால் என அழைக்கிறோம். அதனை ஒரு சவாலாக எடுத்துக்கொண்டு அதனை வெற்றிகரமாக முடிக்க வேண்டும் என்ற தீர்மானத்துடன் முயற்சித்து ஒழுங்காக வாசிக்கும்போது மட்டுமே அதனை வெற்றிகரமாக முடிக்க முடிகிறது. அதில் அவர்களுக்கு உதவி செய்வதற்காக நாங்கள் கீழ்கண்ட காரியங்களைச் செய்கிறோம். தினமும் வாசிக்க வேண்டிய வேதவாசிப்புப் பகுதிகளை நள்ளிரவில் குழுக்களில் நாங்கள் அனுப்பும் நேரத்தில் அத்துடன் மேற்கோள் படத்தையும் (Quote Image) ஐயும் அனுப்புகிறோம். அது பரிசுத்த வேதாகமம், அதன் அருமை பெருமை மற்றும் அதன் வாசிப்பின் முக்கியத்துவம் குறித்து மட்டுமே இருக்குமே தவிர, அதில் வேறு எந்த வாக்குத்தங்களோ, எச்சரிப்புக்களோ அல்லது ஆலோசனைகளோ இடம்பெறுவதில்லை. தினமும் அதனை வாசிக்கும் ஒருவரால் தினமும் கொடுக்கப்படும் பகுதியை வாசிப்பதற்கான உற்சாகம் அடையாமல் இருக்க முடியாது.

வேதவாசிப்புச் சவால் குழுவில் வாசித்து வருபவர்கள் தங்களுடைய வாசிப்பு நிலைமையை அவ்வப்போது பகிர்ந்து கொள்வதற்காகவே நாங்கள் வாரந்தோறும் ஞாயிற்றுக்கிழமைகளில் குழுவினை திறந்து வைக்கிறோம். ஒவ்வொருவரும் தங்களுடைய வாசிப்பு நிலைமையை அங்கு பதிவிடும்போது அது அவர்களுக்கு மட்டுமல்ல, அதை வாசிக்கும் அனைவருக்கும் ஒரு உற்சாகத்தை கொடுக்கிறது. பின்தங்கி வருபவர்கள் மற்றும் தடைகளை எதிர்கொள்பவர்கள் அவ்விதம் பதியும்போது, அவர்கள் அதற்கான ஆலோசனைகளையும் குழுவிலேயே பெற்றுக்கொள்வதால் அது அவர்கள் தொடர்ந்து தங்கள் வேதவாசிப்பில் முன்னேற உதவுகிறது. இதுபோக இரண்டு வாரங்களுக்கு ஒரு முறை Google Form-ல் நாங்கள் மீள்பார்வை (Review) நடத்துகிறோம். இதன் மூலமாக ஒருவர் தனது வாசிப்பு நிலைமையை வாரத்தில் ஒருமுறை குழுவிலும் இரு வாரங்களுக்கு ஒருமுறை அந்த Google Form இணைப்பிலும் பதிவிட முடியும்.

அதில் '50 சதவீதம் மற்றும் அதற்கு குறைவாக' என பதிவிடுபவர்களை நாங்கள் தனிப்பட்ட முறையில் தொடர்பு கொண்டு அதே சவாலில் அவர்கள் தொடர்வதற்கான வாய்ப்புகளோ அல்லது வேறு ஒரு சவாலில் இணைந்து வேதாகமத்தை வாசித்து முடிப்பதற்கான வாய்ப்புகளை கலந்து ஆலோசித்து அதற்கான ஏற்பாடுகளை நாங்கள் அவர்களுக்கு செய்கிறோம். எனவே குழுவிலோ அல்லது இணைப்பிலோ தனது வாசிப்பு நிலைமையை பதிவிடும் ஒருவரால் வாசிப்பு நிலைமையில் முன்னேறாமல் இருக்க வாய்ப்பே இல்லை. ஆனால் உண்மை நிலைமை என்னவென்றால் ஒழுங்காக வாசிப்பவர்கள் அல்லது வாசிக்க முயற்சி செய்வர்கள் மட்டுமே அதில் பதிவிடுகின்றனர். அனைவரும் அதனை முழுமையாக பயன்படுத்திக் கொள்ளும் பொழுது குழுவில் உள்ள பெரும்பாலானோர் வெற்றிகரமாக உற்சாகத்துடன் வாசித்து முடிப்பதற்கு அது உதவியாக இருக்கும்.

**கேள்வி: வேத வாசிப்பு சவாலின் இறுதியில் ஒருவர் அதனை வெற்றிகரமாக, அதாவது பரிசுத்த வேதாமத்தை முழுமையாக வாசித்து முடித்தார் என்பதை நீங்கள் எவ்வாறு உறுதி செய்து கொள்கிறீர்கள்?**

**பதில்:** வேத வாசிப்பு சவாலின் முடிவின்போது அந்த மாதத்தின் இறுதிநாளில் குழுவில் நாங்கள் ஒரு இறுதி மீள்பார்வை (Final Review) இணைப்பு ஒன்றை அனுப்புகிறோம் அதில் தங்களுடைய இறுதியான வாசிப்பு நிலைமை மற்றும் அனுபவங்களை பங்கேற்பாளர்கள் விவரமாக பதிவிடுகின்றனர். அதில் 90% மற்றும் அதற்கு மேலாக முழுமையாக வாசித்து முடித்ததாக பதிவிடுபவர்களை நாங்கள் வெற்றிகரமாக வாசித்தவர்களாக கணக்கில் கொள்கிறோம். அவர்கள் அனைவருக்கும் மின்வடிவில் மற்றும் அச்சிட்ட பாராட்டுச் சான்றிதழ்கள் மற்றும் பரிசுகள் (ஒன்று அல்லது இரண்டு மாத சவால்களில் முடித்தவர்களுக்கு) உண்டு. இறுதி மீள்பார்வையில் வெற்றிகரமாக வாசித்ததாக ஒருவர் பதிவிடுகிறார் என்றால் பொதுவாக அவர் வாரா வாரம் குழுவிலும், இரு வாரங்களுக்கு ஒருமுறை இணைப்பிலும் தன்னுடைய வாசிப்பு நிலைமையை அவ்வப்போது பதிவிட்டவராக தான் இருப்பார். ஆனாலும் பலர் அவ்விதம் எதுவும் செய்யாமல் இறுதி மீள்பார்வையில் மட்டும் தாங்கள் வெற்றிகரமாக வாசித்து முடிந்து விட்டதாக பதிவிடுவர். முழுமையாக பரிசுத்த வேதாகமத்தை அப்போது தான் வாசித்து முடித்த ஒருவர், அப்படி பதிவிடும் பொழுது அவரது கிறிஸ்தவ நேர்மையை (Christian Integrity) மனதில் கொண்டு அதனை வெற்றிகரமாக வாசித்ததாக நாங்கள் கணக்கில் கொள்கிறோம். இருப்பினும் வாராவாரம் மற்றும் இரண்டு வாரங்களுக்கு ஒரு முறை குழுவிலோ மற்றும் இணைப்பிலோ பதிவிடுவது குழுவில் கலந்து கொள்ளும் மற்றவர்களுக்கும் இதனை நடத்தும் எங்களுக்கும் உற்சாகம் கொடுக்கும் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை.

*(தொடர்ந்து கேள்விகள் கேட்டுத் தெரிந்து கொள்வோம்...அடுத்த இதழில்.)*

**தேவனுடைய புத்தகத்தில் உள்ள ஒவ்வொரு வார்த்தையையும் நான் படிக்கும்போது, அதை எழுதத் தூண்டிய நித்தியமானவரை நான் ஆராதிக்கிறேன். - சார்லஸ் ஸ்பர்ஜன்**

## வேத வாசிப்புப் போட்டி

### 1 மாத வேதாகம வாசிப்புச் சவால் - 01 முதல் 31 டிசம்பர் 2024 வரை

"பரிசுத்த வேதாகமத்தை எந்த நேரத்திலும் வாசிக்கலாம், எங்கு வேண்டுமானாலும் வாசிக்கலாம், எப்படியும் வாசிக்கலாம் ... அதனால் நம்மில் சிலர் அதை எங்கேயும், எப்படியும், எப்பொழுதாவது கூட வாசிப்பதே இல்லை" - யாரோ.

இதுவரை எத்தனை முறை முழு வேதாகமத்தையும் வாசித்திருக்கிறீர்கள்? இந்த 2024 இல் ஒரு முறையாவது வேதாகமத்தை வாசித்து முடிக்க முயற்சி செய்திருக்கிறீர்களா?

இல்லையென்றால், 2024 ஆம் ஆண்டு இறுதிக்குள் முழு பரிசுத்த வேதாகமத்தையும் ஒருமுறை வாசித்து முடிக்க இது ஒரு அருமையான வாய்ப்பு.

சவாலை வெற்றிகரமாக முடித்த அனைவருக்கும் அச்சடிக்கப்பட்ட மற்றும் E-சான்றிதழ்கள் வழங்கப்படும். GODependence நடத்தும் சவாலில் முதல் முறையாக முடிப்பவர்களுக்கு ஒரு பரிசும் உண்டு.

போட்டியில் சேர ஆர்வமாக இருக்கிறீர்களா? ஆம் எனில் அதற்கான குழுவில் சேர பின்வரும் இணைப்பை கிளிக் செய்யவும்:

https://chat.whatsapp.com/K0vPVO78eXqCP61fIj6q4l

பதிவுக் கட்டணம் இல்லை... அனுமதி இலவசம். முந்துங்கள்... 05 டிசம்பர் 2024 வரை மட்டுமே அனுமதி உண்டு.

நன்றி.

https://chat.whatsapp.com/K0vPVO78eXqCP61fIj6q4l


* GODependence குழு.

**** இந்த தகவலை உங்கள் குடும்ப உறுப்பினர்கள், நண்பர்கள் மற்றும் சபை விசுவாசிகளுடன் பகிர்ந்து கொள்ளுங்கள்










பரிசுத்த வேதாகமத்தில் எல்லா காயத்தையும் குணமாக்கும் மருந்தும், எல்லா புண்களையும் ஆற்றும் களிம்பும் உண்டு.
- சார்லஸ் ஸ்பர்ஜன்

**இன்னும் இரண்டே வாரங்களில்....**

## சர்வதேச வேதவாசிப்பு தினம் International Day of Bible Reading (IDBR) – 16 டிசம்பர்

அனைவருக்கும் பரிசுத்த வேதாகமத்தை கிடைக்கச் செய்வது பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்த தேவனால் ஏற்படுத்தப்பட்ட சிறுமி மேரி ஜோன்ஸ் அவர்களின் நினைவாக 16 டிசம்பர் 2023 அன்று, முதன்முதலாக "சர்வதேச வேதவாசிப்பு தினத்தை" (International Day of Bible Reading) GODependence குழு ஆரம்பித்து நடத்தியது.

நூற்றுக்கணக்கான GODependence வேதவாசிப்பு சவால் குழுக்களின் பங்கேற்பாளர்கள் அந்த நாளில் Zoomல் நடைபெற்ற ஆரம்பவிழா கூடுகையில் கலந்து கொண்டனர். இந்த சர்வதேச வேதவாசிப்பு தினத்தை அனுசரிக்கும்படியாக எடுக்கப்பட்ட பல்வேறு முயற்சிகளின் மூலம் உலகம் முழுவதும் இருந்து 5000 க்கும் மேற்பட்டோர் இது குறித்து அறிந்து கொண்டனர். இந்த வருடம் இதனை சர்வதேச அளவில் கொண்டுசெல்ல விரும்புகிறோம்.

*கீழ்க்கண்டவைகளை 16 டிசம்பர் அன்று சர்வதேச வேதவாசிப்பு தினத்திற்கான செயல்பாடுகளாக நாங்கள் பரிந்துரைக்கிறோம். இவற்றை முடிந்த அளவுக்கு டிசம்பர் 16 அன்று நடைமுறைப்படுத்த திட்டமிடலாம். டிசம்பர் 15 ஞாயிறு என்பதால் சிலவற்றை அந்த நாளில் செயல்படுத்தலாம்.*

### ஒரு தனிநபராக நான் சர்வதேச வேதவாசிப்பு தினத்தில் எப்படி கலந்து கொள்ளலாம்?

- டிசம்பர் 16 அன்று சற்று நேரம் ஒதுக்கி வேதவசனங்களை வாசிக்க, தியானிக்க அதிலிருந்து தனிப்பட்ட வாழ்க்கைக்கு குறிப்பெடுக்க, அதற்கு உங்களை அர்ப்பணிக்க நேரம் செலவழிக்கலாம்.
- ஏதாவது ஒரு குறிப்பிட்ட வேத வசனத்தை அல்லது வேத பகுதியை மனனம் செய்யலாம்.
- இதனை போட்டோ எடுத்து, உங்கள் WhatsApp Status, Facebook (முகநூல்), இன்ஸ்டாகிராம் போன்றவைகளில் பகிரலாம்.
- நீங்கள் மனப்பாடம் செய்யும் வசனங்களை வீடியோவாக ஒப்புவிப்பதையும் அவ்விதமே நீங்கள் உங்கள் சமூகவலைத் தளங்களில் பகிரலாம்.
- உங்கள் நட்பு வட்டாரத்தில் தேவைப்படும் யாருக்காவது பரிசுத்த வேதாகமத்தை பரிசளிக்கலாம்.
- அவற்றை அவ்விதம் சமூக வலைத் தளங்களில் பகிரும் போது #சர்வதேசவேதவாசிப்புதினம் #IDBR2024 போன்ற ஹேஷ்டேக்குகளை (Hashtags) பயன்படுத்துங்கள். அப்போதுதான் "சர்வதேச வேதவாசிப்பு தினம்" பற்றிய செய்தியானது பலரையும் சென்றடையும்.
- இதன் மூலம் உங்கள் நட்பு வட்டத்தில் இருக்கும் அனைவருக்கும் இது குறித்து விவரங்கள் தெரியவரும்.

### குடும்பம், சபை மற்றும் குழுக்களாக இதனை நாம் அனுசரிக்க, 16 டிசம்பர் அன்று நாம் என்ன செய்யலாம்?

- குழுவாக கூடி அமர்ந்து, ஒரு குறிப்பிட்ட வேத பகுதிகளை அல்லது வேதாகமத்தின் புத்தகங்களை ஒருவர் மாறி ஒருவராக சத்தமாக வாசிக்கலாம்.
- மனப்பாட வசனங்களை ஒப்புவிக்கும் நிகழ்ச்சியை அல்லது போட்டிகளை நடத்தலாம்.
- வேதாகம வினாடி வினா போட்டிகளை நடத்தலாம்.
- பரிசுத்த வேதாகமம் அதன் வரலாறு, பின்னணி மகத்துவங்கள், தனிநபர்களில் சமுதாயத்தில் அதன் தாக்கம் குறித்து பேசும் கருத்தரங்குகள் ஒழுங்கு செய்யலாம்.
- மேற்கண்ட இவைகளில் ஒன்றோ அல்லது அதற்கும் மேற்பட்ட நிகழ்வுகளை நேரடி (In Person) நிகழ்ச்சியாகவோ அல்லது நேரலை (Online) நிகழ்ச்சியாகவோ நடத்தலாம்.
- நேரடி நிகழ்ச்சியாக நடத்தும் பொழுது அவற்றை போட்டோ அல்லது வீடியோ வடிவில் உங்கள் தனிப்பட்ட மற்றும் சபை, குழுக்களின் சமூக வலைத்தள பக்கங்களில் பகிரலாம்.
- இவ்விதம் நேரடி மற்றும் நேரலை நிகழ்வுகளை சமூக வலைத்தள பக்கங்களில் பகிரும் போது, #சர்வதேசவேதவாசிப்புதினம் #IDBR2024 போன்ற ஹேஷ்டேக்குகளை (Hashtags) பயன்படுத்துங்கள். அப்போதுதான் "சர்வதேச வேதவாசிப்பு தினம்" பற்றிய செய்தியானது பலரையும் சென்றடையும்.

### 16 டிசம்பர் 2024 அன்று சர்வதேச வேதவாசிப்பு தினத்தில் GODependence Team ஆக நாங்கள் என்ன செய்ய இருக்கிறோம்?

- 16 டிசம்பர் அன்று தமிழ், ஆங்கிலம் மற்றும் இந்தி மொழிகளில் தனித்தனியான சிறப்பு Zoom கூடுகைகள் நடத்துகிறோம்.
- தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் தனித்தனியாக ஆன்லைனில் மெகா வேதாகம வினாவிடை நிகழ்வு. அதற்கான இணைப்பு டிசம்பர் 15 & 16 தினங்களில் செயல்படும்.
- தங்கள் சமூக வலைத்தள பதிவுகளை பகிர்வதற்கென WhatsApp பயன்படுத்துபவர்களுக்காக டிசம்பர் 16 அன்று செயல்படும் ஒரு தற்காலிக வாட்சாப் குழு.
- 16 டிசம்பர் அன்று தங்கள் பிறந்தநாளைக் கொண்டாடுபவர்களுக்கு சர்வதேச வேதவாசிப்பு தின ஹேஷ்டேக்குகளுடன் (#) வாழ்த்துக்களை பகிர்ந்துகொள்தல். அந்த நாளில் பிறந்த நாள் காண்பவர்கள் எங்களைத் தொடர்பு கொள்ளலாம்.
- தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் ஆன்லைனில் 12 மணி நேர தொடர் வேதவாசிப்பு நிகழ்வை (Bible Readathaon) நடத்துகிறோம்.
- GODependence வேதவாசிப்பு சவால்கள் நடைபெறும் 10 மொழிகளிலும் தேவையிலுள்ள நபர்களுக்கு முழுவேதாகமத்தை வழங்குதல். இது சம்பந்தமாக உதவிகள் தேவைப்பட்டால் எங்களை அணுகலாம்.


தனிநபர்கள் அளவில் பரிந்துரைக்கப் பட்டுள்ள செயல்பாடுகள் மற்றும் GODependence குழு அளவில் திட்டமிடப்பட்டுள்ள நிகழ்வுகள் குறித்த விரிவான தகவல்கள் நமது வேத வாசிப்பு குழுக்களில் பகிரப்படும்.

இங்கே கட்டத்தில் கொடுக்கப்பட்டுள்ள IDBRன் பிரத்யேக பக்கங்களில் சென்று உங்களை இணைத்துக்கொள்ளுங்கள்.

இந்த முக்கியமான சந்தர்ப்பத்தைப் போற்றவும், நம் வாழ்வில் பரிசுத்த வேதாகமத்தின் நித்தியமான பொருத்தத்தைக் கொண்டாடவும் நாம் ஒன்று கூடுவோம்.

இதயப்பூர்வமான எதிர்பார்ப்புடன்,

**GODependence குழு**




**இங்கே கொடுக்கப்பட்டுள்ள IDBRன் பிரத்யேக பக்கங்களில் உங்களை இணைத்துக்கொள்ளுங்கள்.**

**#IDBR2024**

https://tinyurl.com/IDBR-Dec16-FB

https://tinyurl.com/IDBR-Dec16-Insta

https://tinyurl.com/y8pn8ecr

https://tinyurl.com/3hmbydjs

**இன்றைக்கே உங்கள் வேதாகமத்தை எடுத்து வாசிக்க ஆரம்பியுங்கள். அதை எடுத்து வாசிப்பதே உண்மையில் பரிசுத்த வேதாகமத்தை வாசிக்க வேண்டிய முறை ஆகும். - ஜே சி ரைல்**

# GODependence வேத வாசிப்பு சவால்கள்

**31 அக்டோபர் 2024 அன்றுடன் முடிவடைந்த GODependence வேதவாசிப்புச் சவால்களில் வெற்றிகரமாக வேதாகமத்தை வாசித்து முடித்தவர்கள்**

## 1 மாதம்

- சகோதரி . T. ஹெலன் ஜிஜி
- சகோதரி . R. பத்மாவதி
- சகோதரி . ஹெப்சி வில்லிங்ஸ்டன்
- சகோதரி . R. ராதிகா
- சகோதரி . T. பிரேமா
- சகோதரி . R. ஜெயந்தி
- சகோ . M. ஷண்முகியா
- சகோதரி . வனிதா
- சகோதரி . T. சலோமி சகுந்தலா ராணி
- சகோ. சைதுர் ரஹ்மான் சைமன்
- சகோதரி . ஜெய பிரியா
- சகோதரி . S. விஜி செல்வின்
- சகோதரி . R. சுனிதா

## 2 மாதங்கள்

- சகோ. பால்ராஜ்
- சகோதரி. அ.ஹெப்சிபா
- சகோதரி. ஜே.பியூலா பத்மாவதி
- சகோ. ராஜேஷ் குமார்
- சகோதரி. ஹெப்சிபா ராபர்ட்
- சகோ.மோசஸ் முத்துக்குமார்
- சகோதரி. ஏஞ்சல் ஸ்டான்லி
- சகோதரி. ஷோபா டேனியல்
- சகோதரி. கேத்தரின் கீர்த்தனா. ஆர்
- சகோ. பெசலெல் வில்லிங்ஸ்டன்
- சகோ. கிஷன் ஜெய்ஸ்வால்

## 3 மாதங்கள்

- சகோதரி. சாந்தி டி
- சகோதரி. பதுமி சோனோவால்
- சகோதரி. பி.தேவமணி ராஜம்
- சகோதரி. பியூலா பாலகுமார்

## 4 மாதங்கள்

- சகோதரி . நிர்மலா பெனியல்
- சகோ. இ. தேவ அன்பு
- சகோதரி. J. ஹெப்சிபா சிஸ்.
- சகோதரி . T. பிரேமலா குமாரி
- சகோதரி . உஷாராணி G

## 6 மாதங்கள்

- சகோதரி . வளர்மதி மிகவேல்
- சகோ. எம் சேவியர் பாலச்சந்திரன்
- சகோதரி . தெரிஸ் தேவி
- சகோதரி . இந்திரா ஜோன்ஸ்
- சகோ. எம்.அருண்குமார்
- சகோதரி. ஞானமணி சாமுவேல்
- சகோ. ஒய்.செல்லதுரை
- சகோ. டி ஆண்ட்ரூ ஜெயராஜ்
- சகோதரி . அனுப்ரியா. எஸ்
- சகோதரி . அனிதா பியூலா சுகந்தி டி
- சகோதரி . ஏஞ்சலினா சாந்த்
- சகோ . ஆபிரகாம் எஸ் ஜெபவீரன்
- சகோதரி . ஆஷா எல்சி மேரி. ஜே
- சகோதரி . சங்கீதா
- சகோதரி . தாசரி பிரசாந்தி
- சகோதரி . தீனா குமாரி
- சகோ. நோவா

## 1 வருடம்

- சகோதரி. எஸ்தர் ராணி. ஜே
- சகோ. ஜேம்ஸ் குணசேகரன்
- சகோதரி. ஆர். எலிஸ்
- சகோதரி. ஹாகே தனியா
- சகோ. நைஜின்
- சகோதரி. பி. பியூலா ஆக்னஸ்

## வேதாகம குறுக்கெழுத்துப் புதிர் - 1

வேதப்பகுதி: மத்தேயு

### சரியான பதில்கள்

➡ இடமிருந்து வலம்
1. யோர்தான் (3:13)
2. வார்த்தை (8:16)
3. சத்தியம் (5:34)
4. கோடரி (3:10)
5. தேவதூதர்கள் (4:11)
8. அன்பு (24:12)
10. ஒலிவமலை (24:3)
13. கலிலேயா (21:11) (28:16,17)

⬅ வலமிருந்து இடம்
7. கிரியை (11:2)
9. எலியா (17:10)
11. தானியேல் (24:15)
12. சூரியன் (24:29)
14. ஏழெழுபது (18:22)

⬇ மேலிருந்து கீழ்
1. யோவான்ஸ்நானன் (3:1,2)
3. சகோதரன் (5:24)
5. தேவாலயம் (21:10,12)
6. வனாந்தரம் (4:1)
8. அந்திரேயா (4:18) (10:2)

⬆ கீழிருந்து மேல்
9. எகிப்து (2:13)
13. கண் (6:22)
14. ஏரோது (2:1)

### சரியான பதில்களை அனுப்பிய முதல் பத்து நபர்கள்:

1. ஜெ. சங்கீதா ஜெனிஸ் சேகர்
2. A R Elizabeth
3. Sutha Solomon
4. M.ஜெயசெல்வி முத்துராமன்
5. A. Jency
6. Jeba Angel Rani K
7. David Samuvel
8. K.லதா லிவிங்ஸ்டன்
9. Lydia Wilson
10. T.SALOMI SAKUNTHALA RANI

### ஆசிரியர் குழு

பேதுரு தேவதாசன்

அற்புதராஜ் சாமுவேல்

ஜோ. இ. ஆ. ஈஸ்டர் ராஜ்

ஏ. ஆர். பீட்டர்

டெ. டென்சிங்

டார்வின் நேசகுமார் அ

ஷோபா தானியேல்

ஜோசஃபீன் ஷைனி பால்

கேதரின் சுஜி

பரிசுத்த வேதாகமத்தை வாசிக்கும்போது, கிறிஸ்துவே முழு வேதாகமத்திற்கும் வெளிச்சம் தரும் சூரியனாக இருக்கிறார் என்பது நம் மனதில் ஒரு நிலையான கொள்கையாக இருக்கட்டும். - J. C. ரைல்

# விளையாடுவோம் வேதாகம விளையாட்டு - 2


**வேதப்பகுதி : மாற்கு**

கேள்வி எண் 1-5. படத்தைப் பார்த்து நபர்களை கண்டுபிடி (ஒரே பெயருடைய ஒன்று அல்லது ஒன்றுக்கும் மேற்பட்ட நபர்கள்.... நபர்களின் எண்ணிக்கை அடைப்பிற்குள் கொடுக்கப்பட்டுள்ளது).


கேள்வி எண் 6-10: யாருடைய பொருள் என கண்டு பிடி.

கேள்வி எண் 11-15: என்ன உவமை?

குறிப்பு : பதில்கள் அனைத்தும் வசன ஆதாரத்துடன் இருக்க வேண்டும். வேதாகமத்தைப் பார்த்துக் கண்டுபிடிக்கலாம்.



1 (2)



2 (4)



3 (1)




4 (2)




5 (3)



6





7





8




9



10




11



12



13



14




15

https://forms.gle/KM1ky2Fw5r4T9Di19

மேலே கொடுக்கப்பட்ட இணைப்பை கிளிக் செய்து சரியான பதிலை 15/12/2024 க்கு முன்பதாக அனுப்பவும். சரியான பதில் அனுப்பும் முதல் 10 நபர்களுடைய பெயர்கள் அடுத்த மாத இதழில் குறிப்பிடப்படும்.

## சரியான பதில்கள்

விளையாடுவோம் வேதாகம விளையாட்டு - 1

வேதப்பகுதி: மத்தேயு

1) 2 குருடர் பார்வையடைதல் (மத்தேயு 9-27-30)

2) 5 அப்பம் 2 மீன் 5000 பேர் சாப்பிட்டது (மத்தேயு 14:17- 21)

3) நூற்றுக்கு அதிபதியின் வேலைக்காரன் சுகமாகுதல் (மத்தேயு 8:5-13)

4) மீனின் வயிற்றில் இருந்து வெள்ளிப் பணம் எடுத்தல் (மத்தேயு 17:27)

5) கானானிய ஸ்திரீயின் மகள் பிசாசு பிடியில் இருந்து விடுவிக்கப்படுதல் (மத்தேயு 15: 22- 28)

6) அத்திமரம் பட்டுப்போகுதல் (மத்தேயு 21:19)

7) பேதுரு கடல் மேல் நடப்பது (மத்தேயு 14:29)

உவமை

1) நல்ல நிலத்தில் விழுந்த விதை (மத்தேயு 13:8)

2) காணாமல் போன ஆடு (மத்தேயு 18:12,13)

3) கன்மலையின் மேல் தன் வீட்டைக் கட்டின புத்தியுள்ள மனுஷன் (மத்தேயு 7:24,25)

### சரியான பதில்களை அனுப்பிய முதல் பத்து நபர்கள்:

1. Sutha Solomon
2. Hebsi Willingston
3. SMT.T.SALOMI SAKUNTHALA RANI
4. A.JOYCE
5. K.லதா லிவிங்ஸ்டன்
6. Vijaya Jacob
7. Hepciba Mary S
8. S.Santha Ruby
9. U.மிராக்கிளின் ஜெஸி
10. Regina Joseph

உங்களுக்கு ஒரு காதல் கதை உண்டு. அது வேதாகமத்தில் இருக்கிறது. தேவன் உங்களை எந்தளவுக்கு நேசிக்கிறார் என்பதையும், உங்களை ஆதாயப்படுத்திக் கொள்ள அது கூறுகிறது.



# சிப்பிராள் & பூவாள்

## பார்வோனுக்குக் கீழ்ப்படிவதைக் காட்டிலும் தேவனுக்குக் கீழ்ப்படியத் துணிந்த மருத்துவச்சிகள்

**(யாத்திராகமம் 1:15-21)**

யாத்திராகமம் 1:15-21ல் நாம் காணும் சிப்பிராள் மற்றும் பூவாள் எனும் மருத்துவச்சிகளைப் பற்றிய கதை கடும் சவாலான நேரத்திலும் தேவனுக்குக் கீழ்ப்படிவதைப் பற்றிய விசுவாசம் மற்றும் தைரியம் ஆகியவற்றிற்கு உதாரணமான ஒரு கதை ஆகும்.

இஸ்ரவேலர்களின் எண்ணிக்கை பெருகுவதைக் கண்டு பயந்த பார்வோன், அவர்களைக் கட்டுப்படுத்தவேண்டும் என்ற அவனது விருப்பத்தின் காரணமாக புதிதாக பிறக்கும் எபிரெய ஆண்குழந்தைகளைக் கொன்றுபோடும்படி சிப்பிராள் மற்றும் பூவாள் என்ற மருத்துவச்சிகளுக்குக் கட்டளையிட்டான்.

**சிப்பிராள் மற்றும் பூவாளின் விசுவாசத்தில் இருந்து நாம் கற்றுக்கொள்ளும் பாடங்கள்:**


- 1.**தைரியமாக தேவனுக்குக் கீழ்ப்படியுங்கள்:** தனிப்பட்ட முறையில் மிகப்பெரிய ஆபத்தை உண்டாக்கும் வாய்ப்பு இருந்தாலும்கூட, அநீதியான அமைப்புகளுக்கு எதிராக நிற்பதற்கு தேவனுக்குக் கீழ்ப்படிவது நமக்கு அவசியமானதாக இருக்கிறது என்பதை சிப்பிராள் மற்றும் பூவாள் நமக்கு போதிக்கிறார்கள்.
- 2.**தேவனுடைய ஆளுகையை நம்புங்கள்:** மருத்துவச்சிகளின் உயிருக்கு எவ்வித உத்திரவாதமும் இல்லை. ஆனாலும், தேவன் அவர்களைப் பாதுகாப்பார் என்று அவர்கள் நம்பினார்கள். அவர்கள் நம்பிக்கை வீண்போகவில்லை. தேவன் அவர்களைப் பாதுகாத்து, அவர்கள் குடும்பங்கள் தழைக்கும்படி ஆசீர்வதித்தார்.
- **3.சிறுசெயல்களுக்கு இருக்கும் வல்லமையை கண்டுணர்ந்து கொள்ளுங்கள்:** சிப்பிராள் மற்றும் பூவாள் என்பவர்கள் மிகவும் சாதாரணமான பெண்களாக இருந்தாலும் அசாதாரணமான தாக்கத்தை உண்டுபண்ணினர். தேவனுடைய மாபெரும் விடுதலையைப் பற்றிய திட்டத்தில் தைரியமான மற்றும் தேவனுக்கு உண்மையாக இருத்தலின் சிறு செயல்கள்கூட ஒரு மிகப்பெரிய பங்கு வகிக்கமுடியும் என்பதை நமக்குக் காட்டுகின்றன.
- 4.**தேவனுடைய ஆசீர்வாதத்தை விசுவாசியுங்கள்.** நாம் தேவனுக்குக் கீழ்ப்படியும்போது, எதிர்பாராத வழிகளில்/ விதங்களில் அவருடைய ஆசீர்வாதங்கள் வரலாம்.

விசுவாசிப்பதற்கு பலநேரங்களில் துணிந்து செயல்பட வேண்டிய ஆபத்து உண்டு என்பதை சிப்பிராளும் பூவாளும் நமக்கு நினைவுபடுத்துகின்றனர். ஆனால், தேவன் அவருக்குக் கீழ்ப்படிபவர்களை எல்லாவேளைகளிலும் கனப்படுத்துகிறார்.

**- சகோ. பீட்டர் ஏ.ஆர். பாலக்காடு, கேரளா.**

---

## வேதாகம குறுக்கெழுத்துப் புதிர் - 2



**வேதப்பகுதி: மாற்கு எழுதின சுவிசேஷம்**

**➡ இடமிருந்து வலம்**

1. உயிர்த்தெழுந்த இயேசுவை முதலில் தரிசித்தவள் (9)
3. பர்திமேயுவின் தகப்பன் பெயர் (3)
5. இயேசுவின் சிரசின் மேல் ஊற்றப்பட்ட தைலம் (4)
6. திமிர்வாதக்காரனை சுமந்து வந்தவர்கள் எத்தனை பேர் (2)
9. ஒலிவ மலைக்கு அருகான ஊர் (4)
11. இராயனுக்கு செலுத்தவேண்டியது (2)
16. அவியாத அக்கினி இருக்கும் இடம் (4)
18. பேதுரு இது இரண்டு முறை கூவும்முன் மூன்று முறை மறுதலித்தான் (3)
23. புதியதுண்டு இன்னொரு பெயர் (6)
25. படவில் __ அப்பம் மாத்திரம் இருந்தது (2)
27. செபெதேயுவின் குமாரன் (4)

**⬅ வலமிருந்து இடம்**

10. இயேசுவின் சகோதரரில் ஒருவன் (2)
12. நீர் கிறிஸ்து என்றவன் (3)
14. ஜனங்கள் பசும்புல்லில் எப்படி உட்கார வைக்கப்பட்டனர் (3)
28. ஏரோதின் சகோதரன் பெயர் (4)

**⬇ மேலிருந்து கீழ்**

2. ஆயத்துறையில் அமர்ந்திருந்தவன் (2)
5. இதற்குப் பின் சூரியன் அந்தகாரப்படும் (7)
8. இடிமுழக்கமக்கள் (6)
13. மனுஷன் தன் எதை நஷ்டப்படுத்தினால் லாபமில்லை (3)
17. ஒரு துட்டுக்கு சரியான காசு (4)
19. சீஷர்களிடம் இருந்த அப்பங்கள் (3)

**⬆ கீழிருந்து மேல்**

7. இயேசு மகதலேனா மரியாளிடத்திலிருந்து எத்தனை பிசாசுகளை துரத்தியிருந்தார் (2)
24. யோவானின் உடை (7)
26. தாய் தகப்பனுக்காக கொடுக்கும் காணிக்கை (4)
21. மறுரூப மலையில் இயேசுவோடு இருந்தவர்களில் ஒருவன் (2)
20. ஜனங்கள் பந்தியில் நூறு மற்றும் __ பேராக உட்கார்ந்தார்கள் (4)
22. நாங்கள் அநேகர் எங்கள் பெயர்? (4)
15. மனுஷனுக்காக உண்டாக்கப்பட்டது (5)
29. யாருக்கு வைத்தியன் தேவை (6)

**குறிப்பு : பதில்கள் அனைத்தும் வசன ஆதாரத்துடன் இருக்கவேண்டும். வேதாகமத்தைப் பார்த்துக் கண்டுபிடிக்கலாம்.**

https://forms.gle/vkZFmKapYHr1m93J7

மேலே கொடுக்கப்பட்ட இணைப்பை கிளிக் செய்து சரியான பதிலை 15/12/2024 க்கு முன்பதாக அனுப்பவும்.சரியான பதில் அனுப்பும் முதல் 10 நபர்களுடைய பெயர்கள் அடுத்த மாத இதழில் குறிப்பிடப்படும்.

**அறியாமையில் இருப்பவர்கள் தங்களுக்குத் தேவையான எல்லா அறிவையும், நன்றாக கற்றறிந்தவர்கள் தங்கள் அறியாமை இன்னது என்று நிதானித்தறிவதையும் பரிசுத்த வேதாகமத்தில் கற்றுக்கொள்ளலாம். - ராபர்ட் பாய்ல்**

# மாற்கு

**எழுதப்பட்ட காலம் :** கி.பி. 50 - கி.பி60
**நிகழ்வுகள் நடைபெற்ற காலம் :** கி.மு. 7 - கி.பி.26
**நூலின் ஆசிரியர் :** மாற்கு
**புத்தக வகை :** சுவிசேஷம்

## நூல் அறிமுகம்

- மாற்கு சுவிசேஷம் புத்தகத்தின் ஆசிரியர் யோவான் மாற்கு. இவரின் தாய் பெயர் மரியாள். இவர்களுடைய வீட்டில் தொடக்கக் காலக் கிறிஸ்தவர்கள் ஆராதித்து வந்தனர் (அப் 12:12). மாற்கு பர்னபாவின் உறவினர். தொடக்கத்தில் பவுலோடு பயணம் செய்தவர். பவுலுடைய வாழ்வின் இறுதிக் கட்டத்தில் அவருக்கு உறுதுணையாக இருந்தவர் (2 தீமோ 4:11). இவர் அப்போஸ்தலர் பேதுருவுக்கும் துணையாக ஊழியத்தில் ஈடுபட்டிருந்தார்.

## சூழலும் நோக்கமும்

- மத்தேயு சுவிசேஷம் முதன்மையாக சக யூதர்களுக்கு எழுதப்பட்டாலும், மாற்குவின் சுவிசேஷம் ரோமானிய விசுவாசிகளை, குறிப்பாக புறஜாதிகளை இலக்காகக் கொண்டது. முன்பு சுவிசேஷத்தைக் கேட்டு நம்பிய கிறிஸ்தவர்களுக்கு ஒரு போதகராக மாற்கு எழுதினார் (ரோமர் 1:8). கடுமையான துன்புறுத்தலுக்கு முகங்கொடுக்கும் புறஜாதிகளின் நம்பிக்கையை வலுப்படுத்தவும், அவருடைய சீடர்களாக இருப்பதன் அர்த்தம் என்ன என்பதை அவர்களுக்குக் கற்பிக்கவும், உலகத்தின் இரட்சகராக இயேசு கிறிஸ்துவின் வாழ்க்கை வரலாற்றை அவர்கள் முன்மாதிரியாக கொண்டிருக்க வேண்டும் என்று அவர் விரும்பினார்.

## முக்கிய வசனங்கள்

மாற்கு 1:11, மாற்கு 1:17, மாற்கு 10:14-15, மாற்கு 10:45, மாற்கு 12:33, மாற்கு 16:6, மாற்கு 16:15

## புத்தகத்தின் சுருக்கம்

- "தேவகுமாரனாகிய இயேசு கிறிஸ்துவைப்பற்றிய நற்செய்தி" என்னும் தொடக்கச் சொற்களே நற்செய்தி நூலுக்கு நல்ல தலைப்பாக அமைகின்றன. இந்நூலின் முதல் பகுதியில் இயேசு கிறிஸ்து மாட்சிமை மிக்க இறைமகனாகிய மேசியா (1:1) என்பதையும், மனம் மாறும் மக்கள் பாவமன்னிபபுப் பெற்று, பரலோகராஜ்ஜியத்தில் உரிமைக் குடிமக்களாகும் தகுதி பெறுகின்றனர் (1:15) என்பதையும் மாற்கு எடுத்துக்காட்டுகிறார். இயேசு கிறிஸ்து மக்கள் அனைவருக்கும் இரட்சிப்பு வழங்கும் துன்புறுகிற மனுஷகுமாரன் (10:45) என்ற கருத்து, இரண்டாம் பகுதியில் வலியுறுத்தப்படுகின்றது. இயேசு கிறிஸ்து துன்பங்கள்பட்டு இறந்து உயிர்த்தெழுந்து மீட்பரானார் என்னும் தொடக்கக் காலத் திருச்சபையின் மையப் போதனையை, இயேசுவின் வாழ்க்கை நிகழ்ச்சிகளின் அடிப்படையில் மாற்கு விரித்துக் கூறுகிறார். இந்த நற்செய்தி தனித்துவமானது, ஏனெனில் இது இயேசுவின் போதனைகளை விட அவருடைய செயல்களை வலியுறுத்துகிறது. இது மத்தேயுவைப் போல ஒரு வம்சவரலாற்றுடன் தொடங்குவதில்லை, ஏனென்றால் புறஜாதிகள் அவருடைய பரம்பரையில் ஆர்வம் காட்ட மாட்டார்கள். இப்புத்தகம் யூதர்களுக்கு மட்டுமல்ல, புறஜாதிகளுக்கும் இயேசுவே மேசியா என்பதை வெளிப்படுத்த எழுதப்பட்டதாகும். இயேசுவின் வாழ்க்கை, மரணம் மற்றும் உயிர்த்தெழுதல் பற்றிய பதிவுகள் பின்வருமாறு : ஞானஸ்நானத்தில் இயேசுவை அறிமுகப்படுத்திய பிறகு, இயேசு தனது பொது ஊழியத்தை கலிலேயாவில் தொடங்கினார். கலிலேயா அதைச் சுற்றியுள்ள பகுதிகள், பின்னர் யூதேயா வரையில் பயணத்தைத் தொடர்ந்தார். இயேசு பலரின் வாழ்க்கையைத் தொட்டார். சிலுவையில் அறையப்படுதல், மரணம், அடக்கம் மற்றும் உயிர்த்தெழுதல் ஆகியவற்றைச் சுற்றியுள்ள உச்சக்கட்ட நிகழ்வுகளை பெரும்பாலான சீடர்கள் காணவில்லை. ஆனால் பல உண்மையுள்ள பெண்கள் அவருக்கு சாட்சியாக இருந்தனர். ஓய்வுநாளுக்குப் பிறகு, வாரத்தின் முதல் நாள் அதிகாலையில், இயேசு அடக்கம் செய்யப்பட்ட கல்லறைக்கு வாசனை திரவியங்களுடன் சென்றார்கள். கல் உருட்டப்பட்டிருந்ததைக் கண்டதும் கல்லறைக்குள் நுழைந்தார்கள். அவர்கள் பார்த்தது இயேசுவின் உடல் அல்ல, ஆனால் வெள்ளை ஆடை அணிந்திரு ஒரு தேவதூதனைக் கண்டனர். அவர்கள் பெற்ற மகிழ்ச்சியான செய்தி, "அவர் உயிர்த்தெழுந்தார்!" என்பதே. அவருடைய உயிர்த்தெழுதலின் நற்செய்தியைப் பரப்பிய முதல் சுவிசேஷகர்கள் பெண்கள் ஆவர்.

## புத்தகத்தில் இயேசுகிறிஸ்து

- மாற்குவின் பார்வை புறஜாதிகளை நோக்கி இருந்ததால், யூதர்களுக்கு முதன்மையாக எழுதிய மத்தேயுவைப் போல பழைய ஏற்பாட்டிலிருந்து அடிக்கடி மேற்கோள் காட்டவில்லை. இயேசுவை யூத முற்பிதாக்களுடன் இணைக்க அவர் ஒரு வம்சவரலாற்றைத் தொடங்கவில்லை, மாறாக அவருடைய பூமிக்குரிய ஊழியத்தின் தொடக்கமான ஞானஸ்நானத்துடன் தொடங்குகிறார். ஆனால் அங்கேயும் கூட மாற்கு, "கர்த்தருக்கு வழியை ஆயத்தப்படுத்துங்கள்" (மாற்1:3; ஏசா 40:3) என்று மக்களுக்கு அறிவுறுத்தும் தூதன் - யோவான் ஸ்நானகன் பற்றிய பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசனத்திலிருந்து மேற்கோள் காட்டுகிறார். இயேசு பழைய ஏற்பாட்டை மாற்குவில் பல பத்திகளில் குறிப்பிடுகிறார். மாற்கு 7:6 ல் பரிசேயர்களின் இதயங்கள் தம்மிடமிருந்து வெகு தொலைவில் இருந்தபோது, அவர்களின் உதடுகளால் தேவனை மேலோட்டமாக வணங்கியதற்காக இயேசு அவர்களைக் கண்டிக்கிறார், மேலும் அவர்களின் கடின இருதயத்தைக் குறித்து அவர்களின் சொந்த தீர்க்கதரிசி ஏசாயாவைக் குறிப்பிடுகிறார் (ஏசா 29:13). இயேசு கைது செய்யப்பட்டு கொல்லப்படும்போது சீடர்கள் மேய்ப்பன் இல்லாத ஆடுகளைப் போல சிதறிப்போவார்கள் (மாற் 14:27; சகரி 13:7) என்பதை குறிப்பிட்டார். அவர் ஆலயத்தைச் சுத்திகரித்தபோது ஏசாயாவை மீண்டும் குறிப்பிட்டார் (மாற 11:15-17; ஏசா 56:7; எரே 7:11) மேலும் அவர் நம்முடைய விசுவாசத்தின் மூலைக்கல் என்று அவர் விளக்கியபோது சங்கீதங்களைப் பற்றி கூறினார் (மாற் 12:10-11; சங்118:22-23).

## நடைமுறைப் பயன்பாடு

- இயேசுவை துன்பப்படுகிற தேவஊழியராகவும் (மாற் 10:45) நமக்காக தொண்டு செய்யவும், தியாகம் செய்ய வந்தவராகவும் மாற்கு முன்வைக்கிறார். அவர் செய்ததைப் போலவே நாமும் மகத்துவத்துடனும் மற்றவர்களின் சேவையில் பக்தியுடனும் பணியாற்ற வேண்டும். தேவராஜ்யத்தில் பெரியவர்களாக இருக்க, நாம் அனைவருக்கும் ஊழியராக இருக்க வேண்டும் என்று இயேசு நமக்கு அறிவுறுத்தினார் (மாற் 10:44). ஆடுகளுக்காகத் தம் உயிரைக் கொடுக்கும்போது இயேசு தாழ்த்தப்படுவதற்குத் தயாராக இருந்ததைப் போலவே, நாமும் இருக்க வேண்டும்.

## நூலின் அமைப்பு

பகுதி 1. முன் னுரை 1:1 - 13
பகுதி 2. இயேசுவே மேசியா (1:14 - 8:30)
1. இயேசுவும் மக்கள் கூட்டமும் 1:14 - 3:6
2. இயேசுவும் சீடர்களும் 3:7 - 6:6அ
3. இயேசு தம்மைச் சீடருக்கு வெளிப்படுத்தல் 6:6 -8:26
4. இயேசு மேசியா என்னும் அறிக்கை 8:27 - 30

பகுதி 3. இயேசுவே மனுஷகுமாரன் (8:31 - 16:8)
1. பயணம் செய்யும் மனுஷகுமாரன் 8:31 - 10:52
2. எருசலேமில் மனுஷகுமாரன் 11:1 - 13:37
3. மனுஷகுமாரன் வெளிப்படுத்தப்படல் 14:1 - 16:8

பகுதி 4. முடிவுரை 16:9 - 20

GODependence

தொகுப்பு: சகோ. A. டார்வின் நேசகுமார்

உங்கள் வாழ்க்கைப் பாதை நன்றாக இருக்க வேண்டும் என நீங்கள் விரும்புவீர்கள் எனில், தேவனுடைய வார்த்தையை ஆராய்ந்து பாருங்கள். - லைலா கிஃப்டி அகிதா

## சாட்சி -1 ஜெபவீரன், டோனாவூர்

**உங்கள் பெயர், ஊர், குடும்பம், கிறிஸ்தவ பின்னணி & வளர்ப்பு ...**

என்னுடைய பெயர் ஜெபவீரன். நான் டோனாவூரில் பிறந்து, நல்ல கிறிஸ்தவ பெற்றோர்களால் வளர்க்கப்பட்டேன். கல்லூரிநாட்களில் இரட்சிக்கப்பட்டு பின்மாற்றமடைந்தேன். கர்த்தருடைய கிருபையால் 26-வது வயதில், மீண்டும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்கு என்னை அர்ப்பணித்தேன். கர்த்தருடைய கிருபையால் கடந்த 40 ஆண்டுகளாக தேவபணியை செய்துவருகிறேன்.

**நீங்கள் இதுவரையும் சராசரியாக எத்தனை முறை பரிசுத்த வேதாகமத்தை முழுவதும் வாசித்திருக்கிறீர்கள்?**

வேதாகமத்தில் பல பகுதிகளை, பல முறை வாசித்திருந்தாலும், முழு வேதாகமத்தை சில தடவைகள் மட்டுமே வாசித்துள்ளேன்.
GODEPENDENCE-ன் வேதவாசிப்புச் சவால்கள் மூலமாக (ஜனவரி - ஏப்ரல் 2024) ஒரு முறை வாசித்துள்ளேன். இப்போது 6 மாதம் வாசிக்கும் சவாலில் இணைந்துள்ளேன். என் மனதுக்கு மிகவும் சந்தோஷம்!

**நீங்கள் தற்போது வாசித்து முடித்திருக்கிற இந்த வேதவாசிப்பு அனுபவங்கள்...**

GODEPENDECE முறை வித்தியாசமாக உள்ளது. அதாவது, ஒரே நாளில் வேதாகமத்தின் வெவ்வேறு பகுதிகளை வாசிப்பது சுவையாக உள்ளது.

**இவற்றில் GODependence வாட்சாப் குழுவின் நடைமுறைகள் எந்த அளவில் உதவின?**

ஞாயிற்றுக்கிழமைகளில், விடப்பட்ட வேதப்பகுதிகளை வாசித்து முடிப்பது அருமையான ஏற்பாடு. வாரந்தோறும் வினாக்களுக்கு பதில் அளிப்பதும் வெகு அருமை.
புரியாத & கடினமான வார்த்தைகளுக்கான அர்த்தங்களை, நான் வாட்ஸ்அப் குழுவில் பதிவு செய்யவும் எனக்கு வாய்ப்பு கிடைத்தது.

**பரிசுத்தவேதம், வேதவாசிப்பு அதன் அவசியம் குறித்து தமிழ் கிறிஸ்தவ உலகத்திற்கு நீங்கள் ஓரிரு வாக்கியங்களில் சொல்லவிரும்புவது என்ன?**

ஜீவனுள்ள தேவனுடைய ஜீவவார்த்தைகளை, நாம் முழுமையாக அறிய அருமையான வாய்ப்பு. இதை பயன்படுத்த தவற வேண்டாம்.

## சாட்சி -2 ஜென்சி, தூத்துக்குடி

- கர்த்தருடைய பரிசுத்த நாமத்திற்கு ஸ்தோத்திரம் எனது பெயர் ஜென்சி.
- நான் ஒரு இந்து குடும்பத்திலிருந்து இரட்சிக்கப்பட்டவள்.
- எங்கள் அம்மா இந்துவாக இருக்கும்போது குறி சொல்லுவார்கள்.
- எங்களை ஆண்டவர் ஒருநாள் சந்தித்தார்.
- எங்க சொந்த ஊர் தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி.
- நான் திருமணம் ஆகி வந்தது திருவாரூர்.
- என் கணவர் ஆர் சி குடும்பம். நான் இப்பொழுது திருவாரூரில் ஏஜி சபைக்கு போகிறேன்.
- நான் பலமுறை வேதத்தை முழுவதுமாக வாசிப்பதற்கு முயற்சி செய்து இருக்கின்றேன். ஆனால் நான் வாசித்தது இல்லை.
- இப்பொழுது இந்த வேதவாசிப்புக் குழுவில் சேர்ந்து ஆறுமாதத்தில் ஒருமுறை வேதத்தை முழுவதுமாக வாசித்து இருக்கேன்.
- புரிந்து படிப்பதற்கு தேவன் உதவி செய்தார்.

**மேலும் சாட்சிகளுக்கு கீழ்க்கண்ட YOUTUBE இணைப்புகளை கிளிக் செய்து பார்க்கவும்**

- **வேதாகமத்தை படிக்க படிக்க தேவனோடு பயணம் செய்கிறேன்** -SIS. JANE HEXIBAH
- **தேவ சத்தத்தை வேத வசனத்தின் மூலமாக கேட்கிறேன்** -SIS. KALAVATHY ELUMALAI
- **வேதாகமத்தை வாசிக்க வாசிக்க எனக்குள்ளாக மாற்றம் ஏற்பட்டது** - SIS UMA MAHESHVARI
- **வேதாகமத்தை வாசித்து முடித்த திருப்தி எனக்கு கிடைத்துள்ளது** -SIS. SIS. CRISANCIA ANIE
- **வேதாகமம் வாசிக்க நேரத்தை அதிகரித்த போது, Social Media ஈடுபாடு குறைந்து விட்டது** -SIS. S. ANITHA RUTH

**இயேசு பூமியில் வாழ்ந்தபோது அராமிக் மொழியில் பேசினார் என்பது உங்களுக்குத் தெரியுமா?**

**உங்களுக்குத் தெரியுமா?**

**பழைய ஏற்பாட்டில் தேவனுடைய நாமம் குறிப்பிடப்படாத ஒரே நூல் எஸ்தர் என்பது உங்களுக்குத் தெரியுமா?**

**நீங்கள் எவ்வளவு அதிகமாக வேதாகமத்தை வாசிக்கிறீர்களோ, அவ்வளவு அதிகமாக நீங்கள் அதனை விரும்புவீர்கள்; அது இனிமையிலும் இனிமையாக இருக்கும். - வில்லியம் ரொமைன்**

# GODependence நிகழ்வுகள்




## சிறுவர் வேதாகம வாசிப்புச் சவால் (CBRC) - 2024-25

2024-25ம் வருட சிறுவர் வேதவாசிப்பு சவால் (Children BRC) குழுக்களில் சுமார் 250 க்கும் மேற்பட்ட மாணவ மாணவியர் தினமும் கொடுக்கப்படும் வசனங்களை வாசிப்பதுடன் ஒவ்வொரு வாரமும் சில வசனங்களை மனனமும் செய்து வருகிறார்கள். முதல் பருவத்தின் (Term -1) ன் முடிவில் மனன வசனங்களை மனப்பாடமாக ஒப்புவிக்கும் போட்டியில் கலந்து கொண்டவர்கள் பரிசுக்கு தகுதிபெற்றனர்.





## வேத தியான குழுக்கள் (BMG) - ஜனவரி 2025

ஆகஸ்ட் 2020 மற்றும் ஜூலை 2022 ல் முறையே ஆரம்பித்து ஒரு வருடத்திற்கு நடைபெற்ற வேத தியான குழுக்கள் (BMG) தற்போது மீண்டும் 2025 ஜனவரி முதல் ஆரம்பித்து தொடர்ச்சியாக நடத்தப்பட இருக்கின்றன. இவைகளில் கலந்துகொள்ள விரும்புகிறவர்களுக்கான பயிற்சிகள் ஜனவரி 2025ல் நடைபெறும். இது குறித்த தகவல்கள் அடுத்த இதழில் இடம்பெறும். இதற்கான ஆயத்தப்பணிகளுக்காக ஜெபித்துக் கொள்ளுங்கள்.

## வேதவாசிப்புச் சவால்கள் (BRC) - 01 டிசம்பர் 2024 முதல்

முழு வேதாகமத்தையும் வாசித்து முடிக்க நீங்கள் ஆர்வமாக இருந்தால், உங்கள் வசதிக்காக நாங்கள் வடிவமைத்துள்ள வேதவாசிப்புச் சவால்களில் ஒன்றில் சேர்ந்து கொள்ளுங்கள். உங்களுக்கு வசதியான ஒரு கால அளவுத் திட்டம் மற்றும் மொழியைத் தேர்ந்தெடுத்து, அத்துடன் உங்கள் பெயர் (வேதவாசிப்புச் சவாலை வெற்றிகரமாக முடிக்கும் போது அதற்கான பாராட்டுச் சான்றிதழில் அச்சிடப்பட வேண்டிய விதத்தில்) மற்றும் வயதை இந்த இணைப்பில் https://wa.me/96565962559 கிளிக் செய்து, +965 6596 2559 என்ற WhatsApp எண்ணிற்கு தெரிவிக்கவும்.

**“மனித வாழ்வின் எல்லாக் கேள்விகளுக்கும் விடை வேதாகமம்”**




## வேத வாசிப்புப் போட்டி - 01 முதல் 31 டிசம்பர் 2024 வரை




- இந்த வேத வாசிப்புத் திட்டம், ஒவ்வொரு நாளும் பழைய ஏற்பாடு மற்றும் புதிய ஏற்பாட்டிலிருந்து 44 அத்தியாயங்களை வாசிக்கவும், இதனால் முழு வேதாகமத்தையும் 1 மாதத்தில் படித்து முடிக்கும்படி உருவாக்கப்பட்டிருக்கிறது.
- சவாலை வெற்றிகரமாக முடித்த அனைவருக்கும் அச்சடிக்கப்பட்ட மற்றும் E சான்றிதழ்கள் வழங்கப்படும். GODependence நடத்தும் சவாலில் முதல் முறையாக முடிப்பவர்களுக்கு ஒரு பரிசும் உண்டு.
- பதிவுக் கட்டணம் இல்லை... அனுமதி இலவசம். முந்துங்கள்...
- போட்டியில் சேர ஆர்வமாக இருக்கிறீர்களா? ஆம் எனில் அதற்கான குழுவில் சேர பின்வரும் இணைப்பை கிளிக் செய்யவும்:

https://chat.whatsapp.com/K0vPVO78eXqCP61flj6q4l

---

**GODependence வேதவாசிப்பு சவால்கள்**

+965 6596 2559 GODependence
GODependence - தமிழ்
GODependence - தமிழ்
GODependence
GODependence
GODependence

FOLLOW US!

தொடர்பு முகவரி:
**GODependence Trust**
105 Y/1A, நல்ல சமாரியன் நகர்,
வள்ளியூர் - 627117,
தமிழ்நாடு, இந்தியா.

**நீங்கள் வேதாகமத்தை முழுவதுமாகப் பார்த்தால், அது மீட்பாகவும் அழகாகவும் இருக்கிறது, மேலும் இது மனிதகுலத்திற்கான தேவனின் காதல் கதை ஆகும். – டாம் ஷடியாக்**